# பெண் கவிஞர்களின் கவிதைகளில் பெண்

**முனைவர் சி.அம்சவேணி**
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை
கதிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
நீலம்பூர், கோவை.

**மலர்:** 3
**இதழ்:** 1
**தொகுதி:** 1
**மாதம்:** ஜூலை
**வருடம்:** 2018
**ISSN:** 2454-3993

## முன்னுரை

ஆண் பெண் இருவரும் இணைந்து வாழ்கிற இன்றைய சமுதாயம் இருவருக்கும் சமமான உரிமைகளையும் இருத்தலையையும் நிர்ணயித்திருக்கிறது. ஆனால் வேளாண் சமூக வளர்ச்சியில் பெண்ணின் உரிமைகள் ஆண் நிர்ணயிப்பதாக மாறிப்போயின. சங்ககாலத்திலும் இடைப்பட்ட காலத்திலும் அவ்வப்போது தன்நிலை குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டாலும் அதனை முழுமையாகக் கைக்கொள்ள முடியாதநிலை வாய்த்திருந்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அதிகமாகப் பெண்ணிய இலக்கியங்கள் வெளிவரத் தொடங்கின. அதேபோல் சமூக வெளியிலும் பெண், தன்னை உணரவும், தன் உரிமைக்காகப் போராடவும் துணிந்தனர்; விளிம்புநிலைக்கு, தான் தள்ளப்பட்டிருக்கிறோம் என்ற உணர்வு மேலோங்கத் துவங்கியுள்ளது. அது இலக்கியத்தில் சரியான முறையில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. பெண் இன்று தனக்கான அடையாளங்களை உணரத் தொடங்கியிருக்கிறாள். இத்தகைய நிலை பெண்கவிஞர்களின் கவிதைகளில் வெளிப்பட்டிருக்கும் பாங்கினை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

## சுய சிந்தனை உடையவள்

ஆணாதிக்கச் சமூக அமைப்புகள் தனக்கு சாதகமானதொரு கட்டமைப்பைப் பெண்ணுக்கு வகுத்திருக்கிறது. பெண்மனமும் ஆண்மையக் கருத்துக்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டிருக்கிறது. ஆணை மையமாகக்கொண்டே தன்வாழ்வு முழுமை பெறுவதாகப் பெண்மனம் நம்புகிறது. ஆண்களால் உருவாக்கப்பட்ட விதிமுறைகளைத் தனக்கான இலக்கணங்களை வழிநடத்தும் கருத்துக்களாக ஏற்றுக்கொள்ளும். ஆனால், விழிப்புணர்வுகொண்ட பெண்மனம் அதை எதிர்க்கிறது. தன்னுடைய அடிமைத்தளையை உணர்ந்துகொண்ட பெண்மனம் விடுதலையை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியிருக்கிறது.தன்னுடைய சுய உணர்வுகளை மீட்டெடுக்க முனைகிறது.

"
. . . . . .   . . . .
**மையமழியும் கொடுந்துயரின் கரும்புள்ளிகள்**
**ஆரோகணித்து வரும் வலிய தொனியின்**
**குருதி ஸ்தாயியில் மடியும் தோல்விகள்**
**அறுந்து வீழ்த்தப்படும் அடிமை சாசனங்கள்**
**பெண்ணின் தணிந்த குரலில்**
**வாழத்தெரியாதவர்கள் இனங்காணவென்றே**
**வந்தமரும்**

**வண்ணச் சிறகசைத்து வாழ்கின்ற கூடுவிட்டு**
**கையசைப்பில் பாடத் தோதாக**
**உலைக்களத்தின் துருத்தி மீது**
**அப் புள்"[1]**

பெண் இனம் தனக்கானதொரு தனித்த சிறப்பைக்கொண்டு வாழ்ந்ததற்கு ஆதிச்சமூகமே சாட்சி பெண்ணைத் தலைவியாகவும் தெய்வமாகவும் போற்றி வந்துள்ளனர். இதனை, "மிகத் தொன்மையான காலத்திலிருந்தே பெண்ணைப் படைப்பு தெய்வமாகக் கருதும் போக்கு உலகெங்கிலும் காணப்படுகிறது. ரோம், கிரீஸ், அஸீரியா, புராதன சீனா ஆகிய இடங்களில் எல்லாம் பெண்ணை உலகப் படைப்புடனும் செழிப்பு பற்றிய கருத்துக்களுடனும் இணைத்து நோக்கும் பாங்கு காணப்படுகிறது."[2] என்ற கூற்று உறுதிப்படுத்துகிறது.

ஆதிசக்தியாக இருந்து இவ்வுலகைப் படைத்தது பெண்ணே என்ற சிந்தனை தாய்வழிச்சமூகத்தின் அடிப்படையில் எழுந்தது என்பார்கள் அறிஞர்கள். அத்துணை உயரத்தில் வைத்துப் போற்றப்பட்ட பெண் இன்று அழகுப் பொருளாகவும் காட்சிப் பொருளாகவும் வல்லுறவுக்கு ஈடுபடுத்தப்படுபவளாகவும் இழிநிலைக்குத் தள்ளப்பட்டு மீண்டெழ முயல்கிறாள். இதனை,

**"நெருப்பு அணைந்த பூமியில் உருவாக்கப்பட்ட**
**முதல் நெருப்பு**
**இன்று வரையிலும் உன் உடலின்**
**வெம்மையோடே நீடிக்கிறது**
**ஒவ்வொரு துளி நெருப்பிலும் நீ**
**தீ பெண்ணிலிருந்து பிறந்ததென்பாள்**
**என்தாய்**
**எனக்குள் தீயைத் தொட்டறியச் சோதித்தேன்**
**யோனித் தகித்தது."[3]**

என்று தன்னுள் கொண்டிருக்கும் புரட்சித்தீயைப் பேசுகிறாள். ஆண்களை நம்பி மீண்டும் அடிமை விலாசத்திற்குள் புகுவதற்குப் பெண்ணினம் ஆயத்தமாக இல்லை. பாமரத்தனமாய் படிப்பறிவு அற்ற பெண்களாக இருந்தாலும் படித்த பெண்களாக இருந்தாலும் இன்று சுயமதிப்பீடு அவர்களுக்குப் புரிந்திருக்கிறது. படிப்பறிவில்லாத பெண்களுக்கு அதன் விகிதம் குறைவாக இருக்கிறது அவ்வளவுதான். பெண்ணுக்குள் இருக்கும் அந்த அடிமை உணர்வைத்தூண்ட அவ்வப்போது பண்பாட்டுச்சிதைவு, மரபு, கற்புடைமை போன்ற கருத்துக்கள் ஆண்களால் முன்வைக்கப்படுகின்றன. இதன் காரணமாய் மீண்டும் அடிமையாக இருக்கப் பெண்ணினம் உடன்படாது என்பது இப்படைப்புக்களை நோக்கும்போது உறுதியாகிறது.

**பெண்ணியம் போற்றுபவள்**

பெண் நிலை குறித்த விழ்ப்புணர்வு நிலையிலிருந்து பெண் தன்னை முன்னிறுத்தவும் தொடங்கிவிட்டாள் பெண்ணியம் என்பது இலக்கியக் கோட்பாடு என்னும் நிலையிருந்து வாழ்க்கைக் கோட்பாடாக மாறத் துவங்கியுள்ளது. இந்த மாற்றம் சமுதாயத்தில் ஆரோக்கியமான எதிர்வினையாக மாறவேண்டும் என்ற நோக்கில் பெண்ணிய எழுத்தாளர்கள் தங்களின் படைப்புகளை முன் வைக்கின்றனர். பெண்ணியம் என்பது இயல்புக்கு எதிரானதாகப் பார்க்கப்படுகிறது. உண்மையில் பெண்ணியம் என்பது பெண்ணுக்கு இயல்பானது ஆணாதிக்கத்திற்கு எதிரானது. உரிமைகளை, தன்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்தத் தொடங்கியிருக்கிறது புதிய பெண் சமூகம்.

**"உனது படைப்பில்**
**எல்லாம் சமம் என்றால்**
**ஆண்களின் மீநிலைப்போக்கு**

**தாழ வேண்டாமா?**
**பெண்களின் கீழ்நிலைப்போக்கு**
**ஏறவேண்டாமா? .....**
**இறைவா !**
**என்ன கொடுத்தார்கள்**
**இலஞ்சமாக**
**இந்த ஆண்பிறவிகள்?....”[4]**

ஆண்களால் பெண் பின்னுக்குத் தள்ளப்பட்டது நியாயம்தானா என இறைவனிடம் வினவுகிறது இக்கவிதை. பெண் அடிமைப்பட்டுக் கிடந்தபோது சமையலறை மட்டும்தான் சாபக்கேடாக இருந்தது. இன்றோ இரட்டைச்சுமை. முன்னேறி ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்று நிரூபித்தாலும் சுமைகள் குறைந்தபாடில்லை. இன்னும் எத்தனையோ வீடுகளில் ஆண்-பெண் சமையலறையிலும் சரிசமம் என்ற நிலை வளரவில்லை. அதனை இழிவான செயலாக ஆண் சமூகம் வரித்து வைத்திருக்கிறது, அத்தகைய மூடச்செயல்களைப் போக்கி சமையலறையைப் பகிர்ந்து கொள்ளுங்கள் எனப் பெண்ணியம் பேசுகிறார் செல்வகுமாரி,

**“. . . .ஆண்களே அடுப்படியைப்**
**பகிர்ந்து ஆள்வதில் பேரார்வம் கொள்ளுங்கள்,**
**இதில் தாழ்வு வருமெனில்**
**நளபாகத்தை நினைவில் கொள்ளுங்கள்**
**பெண்கள் சமுதாயம் மாற்றம் பெற**
**ஆண்களே மாறுங்கள்”[5]**

பெண்ணை அடிமையாக்க ஆண் சமுதாயம் கையாண்ட மிகப்பெரும் கருவி அழகு என்பதே. மென்மையானவள், அழகானவள், புனிதமானவள், கற்புடையவள் என்று சொல்லிப் பெண்ணை அடிமைப்படுத்தினர். பெண்ணுக்கென வரையறைகள் உருவாக்கி வாழச் சொன்னார்கள் இவையெல்லாம் ஆணாதிக்கத்தின் விளைவுதான். அத்தோடு ஆண்களால் உருவாக்கப்பட்ட புராணங்களும் இதிகாசங்களும் ஆணாதிக்கத்தன்மை வாய்ந்தவையே என்று வாதிடும் பெண்ணியக் கவிதை பின்வருமாறு

**“ . . . . .**
**பிரிந்த இருவரும்**
**சேரும் பொழுது சீதைக்கும் மட்டும் ஏன் தீக்குளிப்பு?**
**ஒருவேளை**
**இராமன் தீக்குளித்திருந்தால்**
**உயிரோடு வந்திருக்க மாட்டானோ?”[6]**

என்று இதிகாசங்கள் ஆண்மைய இலக்கியங்களாகத் திகழ்ந்தன என்று குற்றம் சாட்டுகிறார் கவிஞர். இங்குக் காலம்காலமாய்ப் பெண்ணுக்கென வரையறை செய்யப்பட்டவை அனைத்தும் பெண் முன்னேற்றத்திற்கான தடைக்கல்லாகவே இருந்திருக்கின்றன. பெண்களை முடக்கும் வித்தையை கற்றறிந்திருக்கிறது ஆண்சமூகம். பெண்ணின் இயல்பு நிலையை, தேவையை முன்னிறுத்தாமல் புறந்தள்ளி ‘தீட்டு’ என ஒதுக்கி வைத்தனர்.

**“கருப்பாதையடைத்து**
**அதன் மீதே அரியணையேறும்**
**பாசங்குடனான சித்தாந்தங்கள்**
**அறிந்ததில்லை எம்மின் முழுமையை**
**யாம் உயிர்மாய்க்கும் தகவுகளோ**

**உடல்சிதைக்கும்**
**ஆயுதங்களோ ஆகோம்**
**வரையறைகளும் குறியீடுகளும்**
**குறி வைத்தாலும்**
**யாம்**
**விழுங்கி ஒளிரும் சூரியம் கரும்புள்ளிகளாம்**
**உயிர்த்தலின் தொப்பூழ்க் கொடியாய்த் தொடரும்**
**பெருவெளிப்பெண்"[7]**

எனப் பெண்கள் மீண்டெழுந்து தனது சுயவலிமையை நிரூபிக்க முனைகிறார்கள்.

### தாய் எனும் நிலையில் பெண்

பெண் இயல்பிலேயே பாசவுணர்வுகளுக்குக் கட்டுப்படக்கூடியவள். ஆனால் அவளது தாழ்நிலைக்கும் அறியாமைக்கும் காரணியாக இருப்பது குடும்பம் எனும் கட்டுப்பாடு எனலாம். இதனையே பெரியார் போன்ற பெண்ணியவாதிகளும் கருதினர்.

"குடும்பம் தனிமனிதருக்காகவும் சமூதாயத்திற்காகவும் பெரும் பங்காற்றுகிறது. இது பாலியல், இனப்பெருக்கம், பொருளாதாரம், கல்வி ஆகிய நான்கு முதன்மையான பணிகளைச் செய்கிறது."[8] என்பார் பாலர்சுபெவி. இந்த நான்கு பணிகளிலும் பெண்ணினுடைய பங்கு அளப்பரியது. பெண் தன்னை ஒவ்வொரு படிநிலையிலும் பிறருக்காக வடிவமைத்துக்கொள்ள குடும்பமே மிகப்பெரிய காரணம். பெண் தன்னை தானாக உணரும் தருணத்தில் குடும்ப உறவுகளில் ஒவ்வொருவரிடமும் ஏற்படும் மாற்றங்கள், எதிர்ப்புகள், ஆதரவுகள் எனப் பல நிலைகளை விவரிக்கிறது இந்தக் கவிதைவரிகள்.

**"பேப்பர் கொண்டு வர்றயா'**
**கேள்வி நடுக்கூடம் தாண்டாமல்**
**தொலைக்காட்சி அலறலில்**
**கரைந்து போகும்**
**'காபி கொஞ்சம் வேணும்'**
**பலஹீனமான குரல்**
**சமையலறையைத் தொடுவதேயில்லை**
**'ஒண்ணுக்குப் போகணும்'அவசரக் குரல்**
**பிள்ளைகளின் கூச்சலில்**
**சிதைந்தோடும்.**
**'சாப்பாடு ஆச்சா'**
**விசில் சப்தங்களில்**
**எதிரொலிப்பதேயில்லை**
**பசிக்குரல்.**
**வாசல் வர நேர்கையில் எல்லாம்**
**பதில் பெற இயலாமல்**
**தேவைகளைக் கேள்விகளில்**
**தொலைத்தபடி**
**திடுக்கிடச் செய்கிறார் அப்பா"[9]**

குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் பணிவிடை செய்வதையே தனது முதற்கடைமையாய் கொண்டிருக்கிற பெண் தனக்கான தேவைகளை மறந்தேபோகிறாள்.

**“நீங்கள் மழையில் நனைகிறீர்களா**
**கொடுத்து வைத்தவர்கள்**
**மழைத்துளிகள்**
**என் மகள் கருத்த இதழ்களால்**
**எனக்கிட்ட முத்தங்கள்**
**அவை**
**காற்றில் கலந்து**
**மழையெனத் தூவிக் கொண்டேயிருக்கின்றன.”[10]**

என்ற கவிதையில் மகளின் மேல் தனக்குள்ள அன்புடன் குழைத்து மாற்றுச் சிந்தனையை விதைத்திருக்கிறார்,பெண்ணியக் கவிஞர். பெரும்பாலான மக்கள் நிற வேறுபாட்டை முன்னிறுத்திப் பேசுவர். சிவப்பு நிறம் உயர்ந்ததெனவும் கருமை நிறம் தாழ்ந்ததெனவும் எண்ணும் போக்கு சமுதாயத்தில் உண்டு. அதனை உடைத்து, ‘என் மகள் கருத்த இதழ்களால்’ என்ற வரி, நிறப்பாகுபாட்டை உடைத்தெறிகிறது. பெண்ணுக்கான தடைகளுள் ஒன்றாக நிறப்பாகுபாட்டையும் கூறலாம். “ பெண் விடுதலை பெறாமல் தீண்டப்படாதோர் விடுதலை சாத்தியமில்லை’ என்ற அம்பேத்கர் சிந்தனையையும், ‘பாட்டாளி வர்க்கத்தின் விடுதலை என்பது, பெண் முழு விடுதலைப் பெறாமல் சாத்தியமில்லை’ என்ற லெனின் கருத்தையும் இணைத்துப் பார்த்தால் பெண்ணியம் என்பது பெண் விடுதலை தொடர்பானது என்பதை புரிந்துப்கொள்ளலாம்.”11 என்ற கூற்றை நோக்கும்போது பெண்விடுதலையில் இந்நிறப் பாகுபாடும் அழியும் என்பது உறுதி.

**மகள் எனும் நிலையில் பெண்**

பெண்பிள்ளையின் சிறு வயதிலிருந்து தன் குலப்பெருமை காக்க வந்தவள், அறிவில், திறமையில், என்னைப் போன்ற சாயலுடையவள் என்று பெருமை கொள்ளும் தந்தை பெண்ணின் திருமண வயதில், பெண் பார்க்கும் படலத்தில் அவளுடைய விளையாட்டு, கல்வி, கலை போன்ற திறமைகளைப் பற்றிக் கூறாமல் அவள் அடக்கத்தையும் சமையல்திறனையும் உயர்வுபடுத்திச் சொல்கிறார் என்ற கருத்து ஆணுக்குப் பெண்ணின் மீதான ஆதிக்கத்தை விளக்குகிறது

**“உன் உசரம் நான் என்பதில்**
**உனக்குப் பெருமை**
**உன்னைப் போலவே**
**நானும்**
**கணக்கில் புலியாக்கும்**
**சொல்லிச் சொல்லிப்**
**பூரித்துப்போனாய்**
**. . . . . . . .**
**உன் மகிழ்ச்சி**
**உன் பெருமை உன் கவுரவம்**
**என் சான்றிதழ்களில்**
**பரிசுகளில்**
**வெற்றிக் கோப்பைகளில்**
**பொறிக்கப்பட்டிருப்பதாய்**
**நேற்று வரை வலம்வந்த**
**நீ. . . .**
**கல்யாணமாலை**
**ஒளிபரப்பில்**
**எதையுமே சொல்லாமல்**
**ஏன் இருட்டடிப்பு செய்தாய்?**
**இப்போதெல்லாம்**

**அம்மாவைப் போல**
**தலையாட்டி**
**அடக்க ஒடுக்கமாய்**
**அடங்கி இருப்பதிலும்**
**இருப்பதாகச் சொல்கிறாய்**
**நீ கட்டிக்காத்த**
**பெருமையும் குலகவுரவமும்**
**தந்தையே**
**பனி மலைகளை**
**உடைத்து எடுத்து துண்டுகளாக்கி**
**சூடேற்றிய நீ**
**சூட்டில்**
**பனிக்கட்டிகள்**
**உருகாமலிருக்கும்**
**சூத்திரத்தை**
**எப்போது எழுதப் போகிறாய்?"[12]**

என்று தந்தையிடம் பெண்மனம் கேள்வியெழுப்புகிறது. மேலும், தன் பிள்ளையின் கல்வியையும். திறமையையும் போற்றி வளர்த்த தந்தையிடம் தனக்குக் கணவனாக வாய்த்த ஆண்மகனைப் பற்றி உரைக்கும்பொழுது 'உன்னைப் போல் இல்லை' என்று அப்பாவின் மேல் வைத்த அன்பை வெளிப்படுத்துகிறாள் மகள். மனைவி என்பவள் அடிமையாகத்தான் இருக்க வேண்டும் என்ற கணவனாகிய ஆண்மகனின் எண்ணத்தை, தன்னைத் தேவதையாகப் போற்றும் தந்தையோடு ஒப்பிட்டுப் பார்க்கிறது பெண்ணின் சிந்தனை.

**மனைவி எனும் நிலையில் பெண்**

தமிழ்ச்சமூகக் குடும்ப அமைப்புப் பெண்ணை வீட்டுவேலைகள் செய்யவும், குடும்பத்தார்க்குப் பணிவிடை செய்யவும், வாரிசுகளை உருவாக்கவும் மட்டுமே உரியவள் எனக்கருதியது. கல்வி கற்றுப் பெண்கள் வேலைக்குச் செல்லத் தொடங்கியதும் அவளது சுமை இரட்டிப்பானது. பெண்ணின் பண்பாட்டு அடையாளமாக சமூகம் இவற்றையெல்லாம் வரித்தது.

"பெண்ணின் அடையாளத்தையும் நடத்தை முறைகளையும் வேலைகளையும் ஆண்வழிச் சமூகப்பண்பாடுகள் தீர்மானிக்கின்றன. பெண்ணுக்கென்று எதுவும் இல்லை. ஆணுக்கானவரே பெண் என்ற வகையில்தான், பெண் நடத்தப்படுகிறாா். ஆணின் தேவைகளுக்கு ஈடுகொடுக்கவும், அத்தேவைகளை நிறைவு செய்வதற்குமான வகையில்தான் பண்பாட்டுப் புனைவுகள் அமைந்திருக்கின்றன."[13] பெண் தன் சுயத்தை இழந்தே குடுமபத்தோடு கணவனுக்கு அடங்கிய மனைவியாய் வாழ்கிறாள். தீவிரவாதப் பெண்ணியம் மேற்கண்ட குடும்ப அமைப்பைத்தான் ஒழிக்க வேண்டும் என்கிறது.

ஆண்வழிச் சமூகம் காலம்காலமாக திருமணம் - குடும்ப இயக்கம் அதனைக்கொண்டே பெண்ணை அடிமைப்படுத்தியிருக்கிறது. ஆண் என்பதால் அதிகாரம்கொண்டு மனைவியைத் துன்புறுத்துவதும், அவளது உரிமைகளை ஒடுக்குவதும் பெண்ணுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். அத்துணை கொடுமைகளையும் பொறுத்துக்கொண்டு குடும்ப இயங்கியல் கெட்டுவிடக் கூடாதென நினைக்கின்ற பெண் நினைக்கிறாள்

**"எனது குரல் நாண்கள்**
**அறுந்தன**
**உனது குரல்**
**கூர்வாளான போது. . .!**

**எனது மூச்சை**
**அள்ளிப் போயிற்று**
**உனது மூச்சு. . .!**
**நான் பேச்சற்றுப் போனேன்**
**. . .**
**நீ நினைத்ததை**
**நடத்தினாய்**
**நான் நடைபிணமானேன்!**
**இனி நீ. . .**
**இது உன் காலம்!**
**எனது இறுதி அத்தியாயங்களை**
**நீயே எழுது!**
**உயிர் போகும் வரை தானே**
**வதைக்க முடியும்**
**உன்னால். . .!”[14]**

என்ற கவிதை பெண்ணின் நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

**“தாலி எனக்கு வேலியாம் சொல்லிக் கொண்டாய்**
**நம்பிக்கொண்டிருந்தேன்**
**நிலம் உன்னுடையதாக்க அன்று**
**நீ பத்திரம் எழுதியது**
**தாலியைப் பார்க்கும் போதெல்லாம்**
**வந்து போனது நினைவில்**
**எனக்கு முன்னால்**
**இருந்திருந்த இயல்புகள்**
**என் இருப்புக்களின்**
**இயல்புகளை மண்ணிட்டு மூட நினைக்க**
**நான் உடைப்பெடுக்கிறேன்”[15]**

என தாய்வழிச் சமுதாயத்தை ஆண் அதிகாரம் படைத்த தந்தைவழிச் சமுதாயமாக மாற்றியது பெண்ணின் இயல்புகளை, இருத்தலை அழிக்கத்தான். மாறாக நானோ உன் அதிகாரத்தை மீறி உடைப்பெடுக்கிறேன் என்கிற கவிதை வரிகளில் வாழ்தலுக்கான உண்மை புரிகிறது.

## தொகுப்புரை

கவிதை, படைப்பாளரின் கருத்துக்களை வெளிப்படுத்த உதவும் சிறந்த இலக்கியவகை. இன்றைய காலகட்டத்தில் பெண் தன்னுடைய இழிநிலையிலிருந்து மீள்வதற்கான விழிப்புணர்வு உடையவளாக இருப்பதைப் பெண்கவிஞர்கள் கவிதைகளில் பதிவு செய்திருக்கிறார்கள், கல்வியறிவின் காரணமாக இத்துணை காலம் தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை எதிர்த்துப்போராடி இருக்கின்றனர் என்பதை பெண்கவிஞர்களின் படைப்புகள்வழி அறியமுடிகிறது. மேலும் உறவுகள் குறித்த பெண்களின் மனவோட்டம், அவற்றை அவர்கள் பதிவு செய்தவிதம் என்பதும் நோக்கத்தக்கன. பெண்கள் பாலின முறையில் கீழ்மைப்படுத்தப்பட்டதையும் ஆண்களை உயர்ந்தவர்களாகப் போற்றியதால் பெண்களுக்கு உண்டான இழிநிலையும், பாலின நிலையில் பெண்ணைப் பாகுபடுத்திப் பார்த்தலை விமர்சித்தல் என்கிற பெண்கவிஞர்களின் கருத்து நிலைப்பாடுகள் கவிதைகளில் புலனாகின்றன.

**சான்றாதாரம்**

1. சிவகாமி, கதவடைப்பு, ப.28
2. மங்கை, அ., பெண் அரங்கம் - தமிழ்ச்சூழல், ப.41.
3. மாலதி மைத்ரி, நீரின்றி அமையாது உலகு, ப.39.
4. செல்வகுமாரி, பெண்ணியம் பேசுகிறேன், ப.13
5. மேலது, ப.29
6. மேலது, ப.35,
7. விசயலெட்சுமி, ச, பெருவணப்பெண், பக்.25-26.
8. அழகம்மை, கே, சமூகநோக்கில் சங்கமகளிர், பக்.12-13
9. வெண்ணிலா, அ. ஆசியில் சொற்கள் இருந்தன, எ.55.
10. சந்திரா, நீங்கிச் செல்லும் போன்ற, ப.46
11. அரங்கமல்லிக, பெண்ணியக் குரலதிர்வும், தலித் பெண்ணிய உடல் மொழியும்ஈ பக்.1-2.
12. புதிய மாரலிஈ பக்.18-19
13. மகாராசன், பெண்மொழி இயல்வியல், பக்.24
14. காட்சியில், பொ.ம.பொ. ப.138
15. கிலபாமா, எட்டாவது பிறவி, ப.29